**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 29.08.2025**

**O.S. 136/2020**

**வா.சா. 1 - செல்வராஜ்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

வழக்கு பட்டிகை வீட்டில் இருக்கும் கதவு எண் தெரியுமா என்றால் தெரியும் 5/2-2. வழக்கு பட்டிகை சொத்தில் இருக்கும் வீட்டில் தற்போது யாரேனும் இருக்கிறார்களா என்றால் யாரும் இல்லை. நான் வழக்கில் மொத்தம் 5 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 என்ன ஆவணம் என்றால் வாரிசு சம்மந்தப்பட்ட ஆவணம் நான் தாக்கல் செய்தது தான். வா.சா.ஆ.1 ல் இருக்கும் கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 என்ன ஆவணம் என்றால் பட்டா ஆவணம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 பட்டா நான் தாக்கல் செய்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டாவுடன் வரைபடம் கொடுப்பார்கள் அதனை தாக்கல் செய்தேனா என்றால் அது அவசியம் இல்லை தாக்கல் செய்யவில்லை.

வா.சா.ஆ.2 பட்டா ஆவணம் எப்போது வாங்கினேன் என்றால் 2007 ல். வா.சா.ஆ.2 யார்பெயரில் உள்ளது என்றால் கமலம். வா.சா.ஆ.3 என்ன ஆவணம் என்றால் வீட்டு வரி ரசீதுகள் அதனை நான் தான் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.3 ல் எத்தனை ரசீதுகள் தாக்கல் செய்தேன் என்றால் 2012, 2013, 2014 என மூன்று வருடத்திற்கு ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். மீதமுள்ள ரசீதுகள் என்னிடம் இல்லை என்றால் என்னிடம் உள்ளது மூன்று போதும் என்பதால் அதனை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 ரசீதில் வீட்டு எண் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 5/2-2. வா.சா.ஆ.4 என்ன ஆவணம் என்றால் தகவல்

அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஆவணம். வா.சா.ஆ.4 ல் இடம் பெற்றுள்ள கேள்விகள் அனைத்தும் நான் கேட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 என்ன சர்வே எண்ணிற்கான தகவல்கள் நான் கேட்டுள்ளேன் என்றால் 765/10 சர்வே எண். வா.சா.ஆ.4 ல் கேட்கப்பட்ட கேள்விகள் என்ன என்றால் நியாபகம் இல்லை. வா.சா.ஆ.4 ல் முதல் கேள்வி சர்வே எண்.765/10 ல் எத்தனை நபர்களுக்கு எந்தெந்த உட்பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது? என்றால் சரிதான். இரண்டாவது கேள்வி அவ்வாறு பிரிக்கப்பட்ட உட்பிரிவுகள் எந்தெந்த நபர்களுக்கு ஒதுக்கப்பட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது? என்றால் சரிதான்.

வா.சா.ஆ.5 என்ன ஆவணம் என்றால் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படியான ஆவணம். வா.சா.ஆ.4 ல் கேட்கப்பட்ட இரண்டு கேள்விகளுக்கான பதில்கள் வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளன அந்த பதில்கள் அகஸ்தீஸ்வரம் வட்டம் ராஜாக்கமங்கலம் புல எண். 765/10 ல் 0.01.0 ஹெக்டர் நிலம் சுந்தரம் மனைவி கமலம் என்பவருக்கும் புல எண்.765/10-2 ல் 0.00.50 ஹெக்டர் நிலம் அழகம்மை என்பவருக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டாவது கேள்வியின் பதிலுக்கான ஆவணங்கள் அலுவலகத்தில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 எனக்கு எந்த தேதியில் கிடைத்தது என்றால் 14.08.2020 அன்று கிடைத்தது. 767/10 ல் இரண்டு உட்பிரிவுகள் தான் இருக்குமா அதற்கு மேற்பட்ட உட்பிரிவு இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு பட்டிகை சொத்தில் இடையூறு செய்யக்கூடாது என நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் ஆகையால் வழக்கு பட்டிகை சொத்தில் எனக்கான உரிமையை நான் நிரூபிக்க வேண்டும் என்று தெரியுமா என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்து எனக்கு நேரடியாக உரிமை மூலம் எனக்கு வராத காரத்தினால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 20.07.2020 அன்று

என்னை பிரதிவாதிகள் சார்பாக யாரும் மிரட்ட வில்லை மேலும் அது சம்மந்தமாக எந்த காவல்நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை விசாரணைக்கு செல்லவில்லை நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கமலம் தந்ததாக சொல்லும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் இந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன் பின்பு கமலம் இறந்த பின்பு அவரின் இறப்பு சான்றிதழ் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை நடத்துவதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**